# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) • திருவள்ளுவர் ஆண்டு 2055 • ஜனவரி 13, 2024

Weekly E-paper • January 13, 2024




# தந்தை பெரியார் விருது பேரவைக்குப் பெருமை!


**அரசு ஊழியர்களும் அரசின் நிதிச்சுமையும்!**

சாரதா தேவி

**ஆளுநருக்குக் கருப்புக் கொடி!**

தலையங்கம்

**எல்லா தொழிற்சாலைகளும் தமிழ்நாட்டை நோக்கி!**

வழக்கறிஞர் இராம.வைரமுத்து

# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) • திருவள்ளுவர் ஆண்டு 2055 • ஜனவரி 13, 2024

Weekly E-paper • January 13, 2024


# தந்தை பெரியார் விருது பேரவைக்குப் பெருமை!




2023ஆம் ஆண்டு சமூகநீதிக்கான "தந்தை பெரியார் விருது" 2024 ஜனவரி 13 அன்று தமிழ்நாடு முதலமைச்சர் மாண்புமிகு மு.க. ஸ்டாலின் அவர்களால் பேராசிரியர் சுப. வீரபாண்டியன் அவர்களுக்கு வழங்கப்பட்டது.

தந்தை பெரியாரின் சமூகநீதிச் சிந்தனைகளைக் கொள்கையாக ஏற்று 'திராவிட இயக்கத் தமிழர் பேரவை' அமைப்பின் மூலமாக, எழுத்தின் மூலமாக, மேடைகள் மூலமாக தமிழ்நாடு முழுவதும் பரப்புரை செய்து

"தந்தை பெரியார் விருது" பெற்றுள்ள திராவிடத் தென்றல் பேராசிரியர் சுப.வீரபாண்டியன் அவர்களை வாழ்த்திப் பாராட்டி மகிழ்கிறோம்.

**எழில்.இளங்கோவன்**
(பொறுப்பாசிரியர்)



# அரசு ஊழியர்களும் அரசின் நிதிச்சுமையும்!

**● சாரதாதேவி**

*அரசின் தொடர் நிதிச்சுமை கடனில் முடியும். கடன் மீண்டும் பணியாளர் சேர்க்கையைத் தாமதப்படுத்தும். தாமதம் வேலைவாய்ப்பின்மையை அதிகரிக்கும். வேலைவாய்ப்பின்மை சமூகச் சீர்கேடுகளைக் கூர்மைப்படுத்தும்.*

அரசின் வருவாயில் முப்பதில் இருந்து நாற்பது விழுக்காட்டை, ஒன்றிலிருந்து இரண்டே விழுக்காடு இருக்கும் அரசு ஊழியர்கள் தமக்கிருக்கும் தொழிற்சங்க வலிமையால் கடந்த 50 ஆண்டுகளில் பெற்றாகிவிட்டது. கடந்த 20 ஆண்டுகளில் மட்டும் ஊதியம் 3 மடங்கு அதிகம் பெற்ற அரசு ஊழியர்கள் உண்டா இல்லையா? ஊதிய ஒப்பந்தங்களின் நன்மையை, பணியில் இருப்பவர்களே பெற்று ஒன்றிலிருந்து லட்சம் வரை ஊதியத்துடனும், பிற துணை நன்மைகளுடனும், அரசு ஊழியர்கள் செங்குத்தான வளர்ச்சி அடையச் செய்த தொழிற்சங்கங்கள், நிறைய ஆள்சேர்ப்பை வலியுறுத்தி நன்மைகளைப் பரவலாக்கத் தவறிவிட்டன.

சுமை அதிகமானதால்தான் 2001-2006 ஆட்சிக் காலத்தில், ஜெயலலிதா அரசு துணிந்து அரசு ஊழியர்களைக் கட்டுப்படுத்த முனைந்தது. அதை வலுவாக எதிர்கொண்டு முறியடித்த அரசு ஊழியர் சங்கங்கள், அரசின் நிதிநிலை அறிந்து, தங்கள் ஊதிய உயர்வுக் கேட்பைக் குறைக்கவில்லை. மாறாகப் புதியவர்கள் வருவதை அரசு நிறுத்துவதை ஏற்றுக் கொண்டார்கள். அரசு குறைந்த ஊதியத்தில் ஒப்பந்தத் தொழிலாளர்களை நியமித்துக் கொண்டது. கால்வாசி கூட இல்லாத ஊதியத்தில் அவர்கள் செய்த வேலையை 4 மடங்கு ஊதியம் வாங்கியும் செய்யாத அரசு ஊழியர்கள் இன்றும் இருக்கத்தான் செய்கின்றனர்.

ஓய்வூதியச் சுமை, இறுதி சேம நல, பணிக்கொடை ஆகிய நன்மைகள், ஊதியச் சுமையைப் போன்றே அதிகமாக அழுத்தின.தொடர்ந்து வந்த அரசுகள், சொல்லவும் முடியாமல், விழுங்கவும் முடியாமல், மக்களிடம் எதற்குக் கெட்ட பெயர்

தொடர்ச்சி அடுத்த பக்கம்...

## தமிழ்மகளே! தைப்பாவாய்!




திராவிடத்துப் பெருமகளே! தமிழே! தாயே!
தமிழுக்குத் தலைமகளே! தையின் பாவாய்!
திராவிடத்தின் வரலாறு தொன்மை மேன்மை
திசையெல்லாம் புகழ்சிறக்க ; தீயோர் இங்கே
திராவிடத்தை ஒழிப்பதற்குத் தேம்பு கின்றார்!
தென்குமரி இமயத்தால் தோற்றோ டாது;
திராவிடம்முன் ஆரியமே தெறித்து ஓடும்!
திராவிடத்தின் பெருமுழக்கம் திசைதோர் கேட்க

தைமகளே வந்திங்கு நீயிருப்பாய் – இது
தைமாதம் நீவந்து வாழ்த்திடுவாய்!

வடக்கத்தான் மதவெறிக்கு வேலை யில்லை
வடமதுரா பிருந்தாவன் இங்கே யில்லை!
வடவேதம் மனுவாலே வந்த சாதி
வழக்கொழியும் பெரியாரின் தத்து வத்தால்!
வடக்கிருந்தா அதிகாரம்? வாய்ப்பே இல்லை!
வாழ்கின்ற திராவிடத்தால் வீழ்ச்சி இல்லை!
திடமான ‘தாமரையைத்’ தோற்க டிக்க,
தேர்தலிலே ‘இந்தியா’வைத் தூக்கி வைக்க

தைமகளே வந்திங்கு தோள்கொடுப்பாய்–இது
தைமாதம் உன்மாதம் வாழ்த்திடுவாய்!

ஆன்றபுகழ் புலவோர்கை பட்டுத் தேய்ந்தாய்,
ஆடிவரும் வைகைநீ ராடி வாழ்ந்தாய்!
மாண்புதரும் இலக்கியங்கள் மன்றம் வைத்து
மாதரசி தமிழ்ப்பாவை மகிழ்ந்த தைப்போல்
தோன்றுதமிழ்ப் புத்தாண்டுத் தேறல் கொண்டுத்
திருவழகே பொங்கலுடன் உழவர் நாளில்
தேன்பாகே! தைமாதே! தமிழின் ஊற்றே!
தென்னாடு தமிழ்நாடு திமிர்ந்து நிற்க

தைமகளே வந்தெம்மை வாழ்த்திடுவாய் – இளம்
தைப்பாவாய் உனைநாமும் வாழ்த்து கின்றோம்!

**எழில். இளங்கோவன்**

தமிழராய் வேர் பிடி ! உலகெலாம் கிளை விரி !

கருஞ்சட்டைத் தமிழர்

## ஆளுநருக்குக் கருப்புக் கொடி!

மாநில ஆளுநரால் சேலம் பெரியார் பல்கலைக் கழகத் துணைவேந்தராக நியமிக்கப்பட்ட ஜெகநாதன் முறைகேடுகள் மற்றும் சாதிய வன்கொடுமை அடிப்படையில் கைது செய்யப்பட்டவர். ஆளுநரின் விரலசைவில் செயல்படும் இவர், கைது செய்யப்பட்ட உடனேயே பிணையிலும் வந்துவிட்டார்.

அமைச்சர் செந்தில் பாலாஜி கைது செய்யப்பட்டவுடன் அவரை அமைச்சர் பதவியில் இருந்து நீக்க வேண்டும் என்று ஓங்கிக் குரல் கொடுத்த ஆளுநர் ஆர். என். ரவி, இப்போது கைதான ஜெகநாதனைத் துணை வேந்தர் பதவில் இருந்து ஏன் நீக்கவில்லை?

11-1-2024 அன்று சேலம் பெரியார் பல்கலைக்கழகம் சென்றபோது தி.மு.க, கம்யூனிஸ்ட், ம.தி. மு. க. உள்ளிட்ட கட்சியினரும், மாணவ அமைப்பினரும் ஆளுநருக்கு எதிராகக் கருப்புக் கொடியேந்திப் போராட்டம் நடத்திக் கைதாகி உள்ளார்கள்.

காரணம், கைதாகி ஜாமினில் இருக்கும் ஜெகநாதனை ஆளுநர் ரவி சந்திப்பது சட்டவிரோதம். மேலும் ஜெகநாதனுக்கு எதிரான ஆதாரங்கள், சாட்சிகள் அழிக்கப்படும் வாய்ப்புகளும் இருக்கும் என்பதால்.

அதுமட்டுமல்ல, ஆளுநர் இன்றும் ஜகநாதனுக்குப் பக்கத் துணையாக இருக்கிறார் என்பதை இது உறுதிசெய்யும்.

சனாதனத்தைப் பேசுவது, தமிழ்நாட்டிற்கு எதிராகச் செயல்படுவது, தமிழ்நாடு அரசுக்கு எதிர்மறையாக அரசியல் செய்வது என்று அரசியல் சட்டத்திற்கு மாறாகவே செயல்பட்டுக் கொண்டு இருக்கும் ஆர்.என்.ரவி, ஆளுநர் பொறுப்பில் இருந்து விரைவில் விலகவேண்டும்!

ஆசிரியர்:
**சுப.வீரபாண்டியன்**

பொறுப்பாசிரியர்
**எழில்.இளங்கோவன்**

ஆசிரியர் குழு:
**வெற்றிச்செல்வன்**
**சாரதா தேவி**

வெளியீடு:
**திராவிட இயக்கத் தமிழர் பேரவை**

இணையதளம்:
www.keetru.com,
www.karunchattaibooks.com

மின் அஞ்சல்:
karunchattai@gmail.com

டுவிட்டர்: suba_vee

தொடர்புக்கு
**120 என்.டி. ராமராவ் தெரு,**
**ரங்கராஜபுரம், கோடம்பாக்கம்**
**சென்னை- 600 024,**
தொலைபேசி: 044-2472 6408

முன் பக்கத் தொடர்ச்சி...

என்று இந்தச் சூழலைச் சரி செய்யாமல் தள்ளிப்போட்டன. தனியாரை ஊக்குவித்தன. இது ஒரு விசச் சுழற்சி போல இன்று பூதாகாரமாக அரசையும் இளைஞர்களையும் விழுங்கிக் கொண்டிருக்கிறது

நன்மை பெற்றது மிகக் குறைந்த அளவிலான, ஆனால் தொழிற்சங்க வலிமையுடைய அரசு ஊழியர்கள். பாதிக்கப்பட்டது அமைப்புக்கு வெளியே இருந்த கோடி இளைஞர்கள். கொழுத்த பூனைகளுக்கு மணி கட்டுவது யார்?

திறமையற்ற நிர்வாகம், ஊழல், பதவி வெறி, சாதி வெறி என்று ஒரு காட்டாட்சி நடத்திய அ.தி.மு.க அரசு, ஓய்வூதிய, பணி இறுதி நன்மைகளைக் கொடுக்காமல் நிறுத்தி, தன் ஆட்சிக்காலம் வரை தப்பித்துக்கொள்ள ஓய்வு வயதையே



தள்ளிப்போட்டு, ஊதியச்சுமையையும் ஏற்றியது. போக்குவரத்து உள்ளிட்ட பலதுறைகளில் ஊதிய நிலுவை வைத்தது. சொல்லொணாத கடன் சுமையையும் விட்டுச் சென்றது.

கடன் வட்டிச் சுமை, நிர்வாக சீர்திருத்தம், எதிரிகளின் தொடர் தாக்குதல், ஒன்றிய அரசின் வஞ்சனை ஆகியவற்றைச் சமாளிக்க வேண்டிய தி.மு.க. அரசு, சோர்ந்திடாமல், தன் வாக்குறுதிகளையும், மக்கள் கோரிக்கைகளையும், வளர்ச்சித் திட்டங்களையும் நிறைவேற்றிடப் போராடி வருகிறது.

ஒரு சமூகமாக நாம், நிலவும் இந்தச் சிக்கலைக் . கவனிக்க வேண்டும். ஊதிய உயர்வு தேவையே. ஆனால் வெளியே நம்மைப் போல பல நூறு மடங்கு இளைஞர்கள் குறைந்தபட்ச பணிப் பாதுகாப்புக் கூட இல்லாமல் காத்திருக்கையில், ஊதிய உயர்வின், அரசுச் செலவின் நன்மைகள், விரிவாக மக்களுக்குச் சென்றடைய தொழிற் சங்கங்கள் முனைய வேண்டுமே அன்றி, குறைந்த எண்ணிக்கையினரின் செங்குத்தான வளர்ச்சிக்காக அல்ல.

இந்தச் சூழல் மாறும். அரசு திறமையான அரசு. மக்களின் பக்கம் நிற்கும் தலைமை. குறைகளைச் சுட்டுவோம். ஆனால் இடர்கள் உணர்ந்து சேர்ந்து பயணிப்போம். போக்குவரத்துத் தொழிலாளர்கள் மட்டுமல்ல, தமிழ்நாட்டு இளைஞர்களின் சிக்கல்களும் தீரும். தேவை மக்களின் ஈடுபாடு. இது விமர்சனம் மட்டுமல்ல.

# எல்லா தொழிற்சாலைகளும் தமிழ்நாட்டை நோக்கி!

## வழக்கறிஞர் இராம.வைரமுத்து

எல்லா சாலைகளும் ரோமை நோக்கி என்ற புகழ் பெற்ற பழமொழியைப் போல் “எல்லா தொழிற்சாலைகளும் தமிழ்நாட்டை நோக்கி” என்ற புதுமொழியை உருவாக்கி இருக்கிறார் தமிழ்நாட்டின் முதல்வர் மு.க.ஸ்டாலின். அவர் ஆட்சிப் பொறுப்பேற்றவுடன் 2030 ஆம் ஆண்டுக்குள் தமிழ்நாட்டின் பொருளாதாரத்தை ஒரு ட்ரில்லியன் அமெரிக்க டாலர் அளவுக்கு உயர்த்த வேண்டும் என்ற லட்சிய இலக்கை நிர்ணயித்து செயலாற்றத் தொடங்கினார். முதல்வராக பொறுப்பேற்ற மு.க.ஸ்டாலின் இது வரை 44 தொழிற்சா-லைகளுக்கு அடிக்கல் நாட்டி அதில் 27 தொழிற்சாலைகளைத் திறந்து வைத்திருக்கிறார். இதன் மூலம் 74,757 பேர் வேலைவாய்ப்பை பெற்றுள்ளனர். “முதலீட்டாளர்களின் முதல் முகவரி தமிழ்நாடு” என்ற பெயரில் துறை ரீதியான முதலீட்டாளர்கள் மாநாடு நடத்தியதன் மூலம் 1,90,803 கோடி ரூபாய்க்கான முதலீடுகள் ஈர்க்கப்பட்டு 2,80,600 பேருக்கு வேலைவாய்ப்புகள் ஏற்படுத்தப்பட்டன. ஐக்கிய அரபு நாடுகள், சிங்கப்பூர், ஜப்பான் போன்ற நாடுகளுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் பயணம் மேற்கொண்டு அங்குள்ள தொழில் துறையினருடன் உரையாடி 17,371 பேருக்கு வேலைவாய்ப்புகள் ஏற்படுத்தும் வகையில் 7,441 கோடி ரூபாய்க்கான முதலீடுகள் ஈர்த்தார். இது போன்ற நடவடிக்கைகள் கடந்த பத்தாண்டு அ.இ.அ.தி.மு.க ஆட்சியில் பாழ்பட்டுக் கிடந்த தமிழ்நாட்டின் தொழில் துறையைத் தழைத்தோங்கச் செய்தது. அதற்கெல்லாம் முத்தாய்ப்பாய் அமைந்தது 07.01.2024 மற்றும் 08.01.2024 ஆகிய தேதிகளில் சென்னையில் நடைபெற்ற உலக முதலீட்டாளர் மாநாடு.

ஒரு மாநிலத்தில் முதலீடு செய்ய வெளிநாட்டினர் முன்வரவேண்டுமாயின் அதற்கு அந்த மாநிலத்தில் நடைபெற்று வரும் ஆட்சியின் மீதான நல்லெண்ணம், சட்டம் ஒழுங்கு சிறப்பாகப் பேணப்படும் அமைதியான சூழல், உட்கட்டமைப்பு வசதிகள், அறிவார்ந்த மனித வளம், ஆட்சியாளர்கள் மீதான உயர்மதிப்பு போன்ற காரணிகள் மிக அவசியமானவை ஆகும். தமிழ்நாட்டில் நடைபெற்று வரும் திராவிட மாடல் ஆட்சி இவை அனைத்திலும் சிறந்து விளங்குவதால் உலக முதலீட்டாளர் மாநாடு பெரும் வரவேற்பைப் பெற்றது. இந்த மாநாட்டில் அதிகாரப்பூர்வ பங்குதாரர் நாடுகளாக சிங்கப்பூர், கொரியா, இங்கிலாந்து, ஜப்பான், பிரான்ஸ், ஆஸ்திரேலியா, ஜெர்மனி, டென்மார்க் மற்றும் அமெரிக்கா ஆகிய ஒன்பது நாடுகள் பங்கேற்றன. அத்துடன் ஐம்பது நாடுகளைச் சேர்ந்த தொழில் பிரதிநிதிகள் மற்றும் முக்கிய தலைவர்கள் மாநாட்டிற்கு வருகை தந்திருந்தனர். ரூ.6.64 லட்சம் கோடி முதலீட்டுக்கான 631 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்தாகியுள்ளன. இதன் மூலம் 14 லட்சத்து 54 ஆயிரத்து 712 பேருக்கு நேரடியாகவும், 12 லட்சத்து 35 ஆயிரத்து 945 பேருக்கு மறைமுகமாகவும் என 26.90 லட்சம் பேருக்கு வேலைவாய்ப்பு கிடைக்க இருக்கிறது.

இம்மாநாட்டின் ஒரு பகுதியாக தொழில் வளர்ச்சியில் தமிழ்நாட்டின் தலைமைத்துவம், அதன் நிலைத்தன்மை மற்றும் அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சி ஆகிய கருப்பொருட்களைக் கொண்டு கருத்தரங்கங்கள், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கும் அதன் வாடிக்கையாளர்களுக்குமான பிரத்யேக சந்திப்பு, பல நாடுகளைச் சேர்ந்த ஏற்றுமதியாளர்களுக்கும், உள்நாட்டு விற்பனையாளர்களுக்கும் இடையேயான கலந்துரையாடல்கள், பலதுறை சார்ந்த வல்லுநர்கள் கலந்து கொண்ட அனுபவப் பகிர்வு உரையாடல்கள் போன்ற நிகழ்ச்சிகளும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன.

“எல்லோருக்கும் எல்லாம்”, “அனைத்துத் தரப்பினரையும் உள்ளடக்கிய வளர்ச்சி” போன்ற முழக்கங்களை முன்னெடுக்கும் இந்த அரசு அதைப்பறை




சாற்றும் வகையில் இந்த முதலீடுகளை மாநிலம் முழுவதும் பரவலாக்கி இருக்கிறது. இதுவரை சென்னையைச் சுற்றி மட்டுமே பன்னாட்டு நிறுவனங்கள் இருக்கும் நிலையை மாற்றி விழுப்புரம், கிருஷ்ணகிரி, தூத்துக்குடி, திருநெல்வேலி, இராணிப்பேட்டை, திருவண்ணாமலை, விருதுநகர், திருச்சி, கோவை, நாகப்பட்டினம், இராமநாதபுரம், பெரம்பலூர், காஞ்சிபுரம், செங்கல்பட்டு போன்ற மாவட்டங்களில் பன்னாட்டு நிறுவனங்கள் தொழிற்சாலைகளை அமைக்க இருப்பதை இந்த மாநாடு உறுதி செய்திருக்கிறது. இது தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சியில் மட்டுமின்றி மாநிலத்தின் ஒருங்கிணைந்த வளர்ச்சியிலும் சிறந்த தாக்கத்தை ஏற்படுத்தும்.

இதற்கு முன்பு அம்மையார் ஜெயலலிதா முதல்வராக இருந்த போது 2015 ஆம் ஆண்டிலும், எடப்பாடி பழனிச்சாமி முதல்வராக இருந்தபோது 2019 ஆம் ஆண்டிலும் உலக முதலீட்டாளர்கள் மாநாடு தமிழ்நாட்டில் நடத்தப்பட்டிருந்தாலும் அதில் மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தங்கள் அனைத்தும் காகிதத்தில்தான் இருக்கிறதே தவிர அதன் மூலம் எந்தத் தொழிற்சாலையும் அமையவில்லை என்பதை மக்கள் நன்கு அறிவார்கள். அதனால் தான் மாநாட்டின் தொடக்க நிகழ்வில் சிறப்பு விருந்தினராகப் பங்கேற்ற இந்திய ஒன்றியத்தின் தொழிற்துறை அமைச்சர் பியூஸ் கோயல் “தமிழ்நாட்டை சிறப்பாக மாற்றியமைப்பதில் தைரியமான முடிவுகளை எடுப்பதற்காகத் தமிழ்நாட்டின் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களையும், தொழிற்துறை அமைச்சர் டி.ஆர்.பி.இராஜா அவர்களையும் கண்டிப்பாகப் பாராட்டியே ஆக வேண்டும்” என்று தனது உரையில் குறிப்பிட்டார். அதே போல் மாநாட்டில் பேசிய ரிசர்வ் வங்கி முன்னாள் ஆளுநர் ரகுராம் ராஜன் “பெண்களுக்கான கட்டணமில்லா பேருந்து சேவை மூலம் பெண்களுக்கான வேலைவாய்ப்புகள் பெருகி உள்ளன” என்று தமிழ்நாட்டு அரசுக்குப் பாராட்டு தெரிவித்தார்.

உலக முதலீட்டார்கள் மாநாட்டின் வெற்றியைத் தொடர்ந்து தமிழ்நாட்டின் முதல்வர் மு.க.ஸ்டாலின் இம்மாத இறுதியில் அமெரிக்கப் பயணம் மேற்கொள்ள இருக்கிறார். அவரது இந்த தொடர் செயல்பாடுகள் காரணமாக இந்திய ஒன்றியத்தின் முதல் மாநிலமாக தமிழ்நாடு வெகு விரைவில் முன்னேறும். ●

Published By Dravida Iyyakka Tamilar Peravai. Editor Suba. Veerapandian